தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
கோயம்புத்தூர் - 641 003

முனைவர் ஏ. சோமசுந்தரம், பி.எச்டி,.
மக்கள் தொடர்பு அலுவலர் &
பேராசிரியர் (உழவியல்)

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்: pro@tnau.ac.in

பெறுநர்,
ஆசிரியர்,

தேதி: 10-3-2014

ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

## தேங்காய் மற்றும் கொப்பரையில் விலை ஏற்றம்

உலகளவில் தேங்காய் உற்பத்தியில் இந்தியா மூன்றாமிடம் வகிக்கிறது. 2012-13 ஆம் ஆண்டில், 2.99 மில்லியன் எக்டரில் தென்னை பயிரிடப்பட்டு 15.61 மில்லியன் டன்கள் தேங்காய் உற்பத்தி செய்யப்பட்டது. தென்னையின் பரப்பு மற்றும் உற்பத்தியில் கேரளா முதலிடம் வகிக்கிறது. தமிழ்நாடு 22 சதவீதம் பரப்பு மற்றும் 30 சதவீதம் உற்பத்தியில் பங்களித்து இரண்டாமிடம் வகிக்கிறது.

தமிழ்நாட்டில், கோயம்புத்தூர், திருப்பூர் மற்றும் தஞ்சாவூரைத் தொடர்ந்து கன்னியாகுமாரி, வேலூர், ஈரோடு, தேனி மற்றும் கிருஷ்ணகிரி ஆகியன தென்னை சாகுபடி செய்யும் முக்கிய மாவட்டங்கள் ஆகும்.

தற்போதைய நிலையில் பொள்ளாச்சியைச் சுற்றி உள்ள பகுதிகளில் தேங்காயின் விலை டன்னிற்கு ரூ.24,500 வரை உள்ளது. சராசரியாக 550-600 கிராம் அளவு கொண்ட தேங்காயின் விலை ரூ.14 முதல் ரூ.16 வரை நிலவுகிறது. ஆந்திரா மற்றும் கர்நாடகாவிலிருந்து வரத்து குறைந்துள்ளதால் தமிழ்நாடு மற்றும் கேரளா சந்தைகளில் பற்றாக்குறை நிலவுகிறது. வர்த்தக மூலங்களின் கூற்றுப்படி, தமிழ்நாட்டில் கடந்த இரண்டு ஆண்டுகளாக நிலவிய வறட்சியினால், நடப்பாண்டில் உற்பத்தி அளவு கடந்த ஆண்டைக் காட்டிலும் 50 சதவீதமாகக் குறைந்துள்ளது. இதன் காரணமாக தேங்காய் மற்றும் கொப்பரையின் விலை உயர்ந்து உள்ளது. அவல்பூந்துறை ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில் கொப்பரையின் விலை கிலோவிற்கு ரூ.89 முதல் ரூ.90 வரை உள்ளது. கொப்பரையின் விலையை நிர்ணியிக்கக்கூடிய காரணிகளில் ஒன்றான தேங்காய் எண்ணெயின் விலை தொடர்ந்து அதிகரித்து வருவதும் மற்றும் உற்பத்தியை விட தேவை அதிகரித்துள்ளதும் கொப்பரையின் விலை ஏற்றத்திற்கான முக்கியக் காரணங்கள் ஆகும்.

இச்சூழலில் வருகின்ற மாதங்களில் தேங்காய் மற்றும் கொப்பரை விலை நிலை பற்றி விவசாயிகள் அறிந்துகொள்ள ஏதுவாக தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் உள்ள வேளாண் மற்றும் ஊரக மேம்பாட்டு ஆய்வு மையத்தின் கீழ் இயங்கி வரும் தேசிய வேளாண் புதுமைத் திட்டத்தின் உள்நாட்டு மற்றும் ஏற்றுமதி சந்தைத் தகவல் மையமானது பொள்ளாச்சி மற்றும் அவல்பூந்துறை ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களில் கடந்த 12 ஆண்டுகளாக நிலவிய தேங்காய் மற்றும் கொப்பரையின் விலைகளை ஆராய்ந்தது.

சந்தை மற்றும் பொருளியில் ஆய்வுகளின் அடிப்படையில், தேங்காயின் பண்ணை விலை மார்ச் மற்றும் ஏப்ரல் 2014ல் ரூ.17 வரை இருக்கும் எனக் கணிக்கப்பட்டுள்ளது. சிறந்த தரத்தின் காரணமாக பொள்ளாச்சி சந்தையில் தேங்காயின் விலை மற்ற சந்தைகளில் நிலவும் விலையை விட அதிகமாக இருக்கும். மற்ற சந்தைகளில் காய் ஒன்றுக்கு ரூ. 1 முதல் ரூ.3 வரை குறைந்து காணப்படும் எனக் கணிக்கப்பட்டுள்ளது.

கொப்பரையின் விலை அவல்பூந்துறை ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில் கிலோவிற்கு ரூ.92 முதல் ரூ.96 வரை இருக்கும் எனக் கணிக்கப்பட்டுள்ளது. நெகமம் ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில் கொப்பரையின் விலை குறைவாகவே இருக்கும். மே மாதம் முதல் கர்நாடகாவிலிருந்து வரத்து எதிர்பார்க்கப்படுகிறது. எனவே விவசாயிகள் தேங்காய் மற்றும் கொப்பரையை வரும் மார்ச் மற்றும் ஏப்ரல் மாதத்தில் விற்பனை செய்யப் பரிந்துரைக்கப்படுகின்றனர்.

<u>மேலும் விவரங்களுக்கு தொடர்பு கொள்ள</u>:-

உள்நாட்டு மற்றும் ஏற்றுமதி சந்தைத் தகவல் மையம்,
வேளாண் மற்றும் ஊரக மேம்பாட்டு ஆய்வு மையம்
தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்,
கோயம்புத்தூர்-641003.
தொலைபேசி- 0422-2431405

<u>மேலும் தொழில் நுட்ப விவரங்களுக்கு தொடர்பு கொள்ளவும்</u>:-

பேராசிரியர் மற்றும் தலைவர்
வாசனை மற்றும் நறுமணப் பொருட்கள் துறை
தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்,
கோயம்புத்தூர்-641003.
தொலைபேசி- 0422-6611284

மக்கள் தொடர்பு அலுவலர்